**<u>16.07.2025 அசல் வழக்கு எண்.132/2003 மற்றும் அசல் வழக்கு எண்.11/2007</u>**

**Starting Time : 03.33 p.m.**

**<u>பி.வா.சா.3</u> திருமதி. ஜோதி க/பெ. பெருமாள் பிள்ளை.**

**<u>சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, அசல் வழக்கு எண்.132/2003-ன் வாதிகள் மற்றும் அசல் வழக்கு எண்.11/2007-ன் 3 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1.** நான் மேற்படி வழக்கில் எனது தரப்பில் கடந்த 2006 முதல் 2024 வரை மேற்படி வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவாகி அதை மீண்டும் கோப்பிற்கு எடுத்தும், சாட்சிகளை விசாரிப்பதற்கும் கடந்த 18 வருடங்களாக மீண்டும் மீண்டும் மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண்.1-ல் அசல் வழக்கு எண்.122/2003 மற்றும் அசல் வழக்கு எண்.13/2007 ஆகியவை சம்பந்தமாக இந்த சாட்சிய அபிடவிட் தாக்கல் செய்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**2**. அசல் வழக்கு எண்.122/2003 கடந்த 05.02.2018 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது (**Dismissed for Default**) என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எனது கணவருக்கும் மற்றும் என் பெற்றோருக்கும் இடையில் எவ்வித கருத்து வேறுபாடும், விரோதமும் கிடையாது என்றால் சரிதான். சுமூகமாக தான் இருந்தோம். என் கணவருக்கு படிக்க தெரியுமா என்றால் படிப்பறிவு இல்லை, கையெழுத்து மட்டும் போடுவார். எனது தாய் தந்தையரின் கையெழுத்தை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும்.

**3**. எனது கணவரும், என் தகப்பனாரும் தமிழில் தான் கையெழுத்து போடுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1 முதல் 3** ஆவணத்தில் உள்ள கண்ணன் என்ற கையெழுத்து எனது தகப்பனாருடையதா என்றால் இல்லை, அவருடைய கையெழுத்து அவ்வாறு இருக்காது. அவருக்கு படிப்பறிவு இல்லை. என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள பெருமாள் என்று உள்ள கையெழுத்து எனது கணவருடையதா என்றால் இல்லை, அவருடைய கையெழுத்து அவ்வாறு இருக்காது. அவருக்கு படிப்பறிவு இல்லை. என்னிடம்

காட்டப்படும் **பி.வா.த.சா.ஆ.1** ஆவணத்தில் 6 பக்கங்களிலும் உள்ள கண்ணன் என்ற கையெழுத்து எனது தகப்பனாருடையதா என்றால் சரிதான்.

**4**. என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் மற்றும் பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள எனது தகப்பனாரின் கையெழுத்தாக சொல்லப்படும் கண்ணன் என்ற கையெழுத்து இரு ஆவணங்களிலும் எதாவது வித்தியாசம் உள்ளதா என்றால் வித்தியாசம் உள்ளது. கையெழுத்தில் என்ன மாதிரியான வித்தியாசம், எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் எனது தகப்பனாரின் கையெழுத்து அவ்வாறு இருக்காது. என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.1 முதல் 3** வரையான ஆவணங்களில் உள்ள கண்ணன் என்ற கையெழுத்து என் அப்பாவுடையது இல்லை. என்னிடம் காட்டப்படும் **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் உள்ள கண்ணன் என்ற கையெழுத்து என் தகப்பனாருடையது ஆகும்.

**5**. என்னிடம் காட்டப்படும் **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் பக்கம் 5-ல் உள்ள சாட்சிகள் இடத்தில் முதலாவதாக ஜோதி என்று குறிப்பிட்டுள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது தான். என்னுடைய கையெழுத்திற்கு பின்னிட்டு வேறு யார் சாட்சி கையொப்பமிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சாட்சிகளாக கையெழுத்திட்ட மூன்று நபர்கள் யார் யார் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் இடது பக்கம் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யப்பட்ட நபர் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**6**. **வா.த.சா.ஆ.1 முதல் 3** வரையான ஆவணங்களில் உள்ள கண்ணன் என்ற கையெழுத்தும், **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் 6 பக்கங்களிலும் உள்ள கண்ணன் என்ற கையெழுத்தும் என் தகப்பனாரின் கையெழுத்து தான் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் நான் 1ம் சாட்சியாக கையெழுத்து செய்திருப்பதால் அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தகப்பனாரின் கையெழுத்து தான் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். என்னுடைய கையெழுத்து உள்ள ஆவணத்தில் கண்ணன் என்று உள்ள கையெழுத்து இருந்தால் அது என்னுடைய தகப்பனாரின் கையெழுத்து என்று

எனக்கு சொல்லிக் கொடுத்ததின்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7**. வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களை பார்வையிட வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனு செய்து எப்போதாவது பார்த்தேனா என்றால் இல்லை. தற்போது தான் மேற்படி ஆவணத்தை பார்க்கிறேன் என்றால் சரிதான். என் கணவர் கையெழுத்திட்ட ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது கணவரின் கையெழுத்தை வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் உடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் கடன் ஏதும் வாங்கியுள்ளாரா என்றால் எவ்வித கடனும் வாங்கவில்லை. என் தகப்பனார் கடன் எதாவது வாங்கினால் என்னிடம் தெரிவிப்பாரா என்றால் தெரிவிப்பார்.

**8**. 1990ல் நாராயணசாமியிடம் என் தகப்பனார் ஏதேனும் கடன் வாங்கினாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் வெற்று பேப்பரில் கையெழுத்து செய்தோ, ஆவணங்கள் ஏதேனும் எழுதிக்கொடுத்து கடன் பெற்றாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், **12வது பாராவில் 1ம் பிரதிவாதி வாதியிடம் 1990ஆம் ஆண்டில் உள்ள ரூ.700/-ஐ பைசல் செய்து மேற்படி வெற்று பேப்பர்களை 1ம் பிரதிவாதி திரும்ப பெற்றுக்கொண்ட காரணத்தால் மேற்படி பேப்பர்களில் இருந்த கையெழுத்தை போன்று போர்ஜரியாக கையெழுத்து போட்டு சூதுமார்கமாக இந்த அக்ரிமெண்ட்டை உருவாக்கி வாதி இந்த தாவா தாக்கல் செய்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு நான் கூறவில்லை, அது பற்றி எனக்கு தெரியாது**. (மேற்படி சங்கதிகள் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டது).

**9**. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.1**ல் எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ரூ.**19,205**/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **பி.வா.சா.ஆ.1**ல் கிரய தொகை ரூ.**50,000**/-என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது நியாயமான தொகையா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், 4வது பாராவில் வாதி குறிப்பிடும் அக்ரிமெண்ட் காலங்களில் தாவா சொத்தின் சந்தை மதிப்பு மேற்படி

அக்ரிமெண்ட்டில் குறிப்பிட்டுள்ள தொகையை போல் பல மடங்கு அதிகம் என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்வில்லை.

**10**. நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து தான் **பி.வா.சா.ஆ.1**-ஐ நடராஜன் என்பவருக்கு எழுதிக் கொடுத்தோமா என்றால் ஆம் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து தான் எழுதிக் கொடுத்தோம். எனது தகப்பனாருக்கு பாத்யப்பட்ட வீட்டினை நானும் எனது அப்பாவும் சேர்ந்து என் சித்தப்பா மகன் ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்தோமா என்றால் நானும் என் அப்பாவும் இனாமாக எழுதிக் கொடுத்தோம். ஆறுமுகத்திற்கும் எங்களுக்கும் ஏதேனும் கருத்து வேறுபாடு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆறுமுகத்திற்கு என் அப்பா மட்டும் தான் மேற்படி வீட்டை எழுதிக்கொடுத்தார் என்றால் அது தவறு என்றும், நானும் என் அப்பாவும் சேர்ந்து தான் எழுதிக் கொடுத்தோம், அதை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

**11**. எனது தகப்பனாரின் அப்பா பெயர் சுப்பராய பிள்ளை என்றால் சரிதான். என் தாத்தாவிடமிருந்து என் அப்பாவிற்கு என்னென்ன சொத்துக்கள் வந்தது என்றால் வீடும், தாவா சொத்துக்களும் ஆகும். மேற்படி வீட்டினை நானும் எனது அப்பாவும் சேர்ந்து என் சித்தப்பா மகன் ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்தோமா என்றால் நானும் என் அப்பாவும் இனாமாக எழுதிக் கொடுத்தோம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பாரா 2-ல் உண்மையில் தாவா சொத்து எனது பாட்டனாரான 1ம் பிரதிவாதியின் தந்தை விட்டுச் சென்ற பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு வாங்கி விருத்தி செய்யப்பட்ட சொத்துக்கள் ஆகும், எனவே தாவா சொத்தில் எனக்கும் உரிமையுண்டு என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. அது பற்றி எனக்கு தெரியாது.

**12**. என்னிடம் படித்து காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், பாரா எண்.10 மற்றும் 15-ல் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால், அவ்வாறு நான் கூறவில்லை, அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு சொத்துக்களை சுற்றிலும் அசல் வழக்கு எண்.132/2003-ன் வாதிகளின் பூமி

உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், வழக்கு சொத்தை சுற்றி ஒரு பக்கம் ரோடும், ஒரு பக்கம் குமார், சூரியகாந்தி நிலமும், மற்ற இரண்டு பக்கமும் வாதிகளின் 7 ஏக்கர் நிலமும், கிணறு பம்புசெட்டும் உள்ளது என்றால் ரோடு உள்ளது மட்டும் எனக்கு தெரியும். மற்ற மூன்று பக்கமும் யாருடைய நிலம் உள்ளது என்றும், அவர்களின் பெயரும் எனக்கு தெரியாது.

**13**. 1990ல் இருந்தே வாதிகளின் நிலத்தில் உள்ள கிணறு பம்புசெட் மூலம் தண்ணீர் பாய்ச்சி வழக்கு சொத்துக்களை 1990ல் இருந்தே அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் எத்தனை முறை சென்று பார்த்தேன் என்றால் வழக்கு சொத்துக்கள் எங்களுடையது என்பதால் எத்தனை முறை பார்த்தேன் என்று என்னால் சரியாக கூற இயலாது. அடிக்கடி சென்று பார்த்து வருவேன். வழக்கு சொத்தை சுற்றிலும் யார் நிலம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் வெளியூரில் திருமணமாகி தங்கிவிட்டதால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை மட்டும் நான் சென்று பார்த்து வருவேன். வாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் உறவினர்கள் தான். வாதிகளை எனக்கு தெரியும். வாதிகளுக்கும் எங்களுக்கும் கருத்துவேறுபாடு, விரோதம் உண்டா என்றால் இல்லை.

**14**. என்னிடம் படித்து காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பாரா 11-ல் சொல்லியுள்ள சங்கதிகளான மேற்படி வழக்கும், ஆவணங்களும் வாதிகளால் தவறாக உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. என் தகப்பனார் காலமாகும்போது அவருக்கு வயது என்ன என்றால் 80 வயது. எனது தகப்பனார் காலமான போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். எனது அம்மா எப்போது காலமானார் என்றால் என் தகப்பனார் இறப்பதற்கு 20 வருடங்களுக்கு முன்பே காலமாகி விட்டார். எனக்கு திருமணமான அடுத்த வருடம் என் தாயார் காலமாகி விட்டார்.

**15**. எனக்கு திருமணமானபோது எத்தனை வயது என்றால் 15 வயது. எனக்கு திருமணம் ஆன பின்னிட்டு என் பெற்றோர் என்னுடன் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். என் தாயார் காலமான பின்னிட்டு என் தகப்பனார் என்னுடைய பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயங்களில்

எனது அப்பா யாருடன் இருந்தார் என்றால் என் சித்தப்பா வீட்டிலும் இருந்தார். எனது வீட்டிலும் இருப்பார். வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1 ஆவணம் வெள்ளை தாளில் எழுதப்பட்டதா அல்லது முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.த.சா.ஆ.1 ஆவணம் எனது அப்பா என்னுடன் இருந்த போது எழுதப்பட்டதா, அல்லது அதற்கு முன்பு எழுதப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**16**. தாவா சொத்துகளிலும், வீட்டிலும் எனக்கு உரிமையில்லாததால் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நானும் சேர்ந்து என் தகப்பனார் உடன் கிரய ஆவணம் எழுதிக்கொடுக்காமல் அதில் சாட்சி கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி சொத்துக்களில் எனக்கு உரிமையுள்ளது. என் பெற்றோருக்கு நான் மட்டுமே வாரிசு ஆவேன். வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையானது என்றும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாதிகளை ஏமாற்றுவதற்காக நானும் என் தகப்பனாரும் சேர்ந்து தயாரிக்கப்பட்ட பொய்யான ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

**17**. வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.132/2003-செலவுத் தொகையுடன் தீர்ப்பாகவேண்டும் என்றும், அசல் வழக்கு எண்.11/2007 செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையானது என்றால் அதில் என் கணவர் சாட்சி கையொப்பமிட்டிருப்பார் என்றும், வழக்கில் எனது தரப்பில் சாட்சியமளித்திருப்பார் என்றும் எங்களது எதிர்வாதம் பொய்யானது என்பதால் நான் மட்டும் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.11/2007-ன் வாதி நடராஜன் தான் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க ஒவ்வொரு முறையும் அழைத்து வருகிறார் என்றால் சரிதான்.

**Ending time : 4.58 p.m.**

ஓம்/- செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.